**மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகார சபையின் இருப்புக் கொள்வனவு உரிய இருப்புக் கணக்குகளுக்கு வரவு வைக்காமல் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், இருப்புகள் வழங்குதல் கணக்குகளில் சீராக்கல் செய்திருக்கவில்லை. வருட இறுதியில் பௌதீக மெய்மையாதல் இருப்பின் படி இருப்புக் கணக்குகளில் மீதியான இருப்பு மீதி சீராக்கல் செய்து வேறுபாட்டைச் செலவுக் கணக்குகளுக்கு வரவு அல்லது செலவு என சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. செலவுக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட பெறுமதிகளின் கூட்டுத்தொகை அடுத்த ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்ததுடன், அதே விதத்தில் முன்னைய ஆண்டிற்கான மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய செலவுகள் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 9,959,382 தொகை ஆகும். இருப்புக் கொள்வனவு மற்றும் வழங்குதல்கள் சரியாக கணக்குகளை சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இவ்வகையான செய்முறை ஒன்றும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவு, செலுத்த வேண்டிய செலவு மற்றும் திரண்ட நிதியம் மீதி சரியாக சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | இருப்புகளை கணக்கீடு செய்தல் தொடர்பாக தெளிவான கருத்துரைகள் மேற்கொள்ளப்படவில்லை. | இருப்புக் கொள்வனவு மற்றும் வழங்குதல் சரியான முறையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 24 பந்திக்கு இணங்க | வருட இறுதியில் உள்ளவாறு பாதீட்டு எண்ணிக்கைகள் மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகள் இணக்கம் செய்யப்படுவதுடன், | பாதீட்டு எண்ணிக்கைகள் மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகள் இணக்கம் செய்து நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | பாதீட்டு எண்ணிக்கைகள் மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளை இணக்கஞ் செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை | ஏதேனும் முரண்கள் காணப்படின் அதனை முகாமைச் சபைக்கு மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு இருந்த போதிலும், தற்போது பயன்படுத்தப்படும் கிரயம் ரூபா 374,750,208 தொகையான 08 விடயங்கள் காணப்பட்ட போதிலும், அந்தச் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு இணங்க மீண்டும் மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனைகள் மேற்கொண்டு அந்தச் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்து 2023 ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க ஆக்கபூர்வமான ஆயுட் காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கிரயப் பெறுமதியில் அடங்கியுள்ள உட்புற காற்றின் தரத்தை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்திற்குரிய ரூபா 11,605,308 தொகை பெறுமதியான அளவை கருவிகள் 2016 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்டதுடன், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 92 (அ) மற்றும் (ஆ) இற்கு இணங்க அது தொடர்பாக | தவறான கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழியில் இருப்பு மற்றும் நடைமுறை வேலை மூலதனக் கணக்கில் முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 9,596,172 தொகைக்கான 07 இருப்பு விடயங்களின் மீதி, மீளாய்வாண்டின் பேரேட்டின் ஆரம்ப மீதி என கணிக்கும் போது ரூபா 10,657,132 தொகையென ரூபா 1,060,960 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. ஆரம்ப மீதி, அதனொடு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையுடன் இணக்கஞ் செய்கையிலும் ரூபா 261,828 இற்கான வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிர்வாகப் பகுதியால் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி, திருத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், தெளிவான கருத்துரைத் தெரிவித்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு காணப்படும் மீதிகள் மீளாய்வாண்டு ஆரம்ப மீதியென சரியாக காட்டப்பட வேண்டியதுடன், அட்டவணைகளுடன் சமனாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்களின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்புக் கணக்கில் மிகை ஒதுக்கம் ஒன்று என காட்டப்பட்டிருந்த ரூபா 1,708,574 இற்கான பெறுமதி, கணக்குகளை சமப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட தொங்கல் கணக்கு மீதிகள் என அவதானிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 18,251,035 இற்கான நடைமுறை வேலை மற்றும் வழியில் உள்ள இருப்பு மீதியின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்புக் கணக்கு சரியானவை என பிழையான கருத்து தெரிவித்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பூர்த்தி செய்யப்படாத வேலைகள் தொடர்பாக செலவிடப்பட்டுள்ள பணம் சரியாக நடைமுறை வேலைக் கணக்கில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 906,692 தொகை பெறுமதியான ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் | கோவைகளை உரிய முறையில் பரிசோதனை செய்து பூர்த்தி செய்த பின்னர் 2023 ஆண்டில் மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை மூலதனப்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரன்தெனிய இயற்கை கள மையத்தின் நிர்மாணச் செலவுகள் ரூபா 4,168,141 தொகை மூலதனப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வழியில் இருப்பு மற்றும் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, அந்தச் சொத்துக்கள் தொடர்பாக பெறுமானத் தேய்வுக் கணிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பெறுமானத் தேய்வுச் செலவு மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | பெறுமானத் தேய்வு கணித்து சரியாக கணக்கு சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | சுற்றாடல் அதிகார சபையின் Firewall மென்பொருள் வழங்கி பொருத்துவதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 2018 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 3,475,005 இற்கான கட்டளையொன்றின் படி மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 3,127,505 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்புக் கணக்கில் அடங்கிய பெறுமதி ரூபா 1,563,877 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் அந்தக் கணக்கின் மீதி ரூபா 1,563,628 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் போது இந்த மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்த மொத்தப் பெறுமதி 2023 நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்புக் கணக்கில் இருந்து அகற்றப்படும். | வேலைகள் பூர்த்தி செய்யப்படாத கருமங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட அனைத்து பணமும் நடைமுறை வேலைக் கணக்கிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட 2022 திசெம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்த நூலக புத்தக கணிப்பீட்டு அறிக்கையின் படி பதிவழிக்கப்பட்ட 1,024 புத்தகங்கள் மற்றும் காணாமல் போன 2,746 புத்தகங்கள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கான நூலக புத்தக இருப்புக் கணிப்பீடு 2022 திசெம்பர் 23 திகதி மேற்கொள்ளப்பட்டது.<br>1984 ஆண்டு முதல் இந்த நூலகப் புத்தக இருப்பு காணப்படுகின்றமையால் 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் படி காணாமல் போன புத்தகங்கள் தொடர்பாக சரியான அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் | இருப்புக் கணிப்பீட்டின் படி பதிவழிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் காணாமல் போன புத்தகங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இற்கு இணங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணிப்பீடொன்று மேற்கொண்டு 1984 ஆம் ஆண்டு முதல் காணாமல் போன புத்தகங்களின் பெறுமதி வருட ரீதியாக கணிக்கப்பட்டு கணக்குகளில் சரியாக சீராக்கல் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்பு வெவ்வேறாக கணக்கீடு செய்யாமல் ஒரு பேரேட்டுக் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் அவற்றை தெளிவாக வேறுபடுத்தி இனங்காண முடியாமல் உள்ளது. | எதிர் காலத்தில் நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்புக் கணக்குகளின் மீதிகள் வெவ்வேறாக விரிவாக இறுதிக் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்பு நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | சுற்றாடல் தாக்க கணிப்பீட்டு அலகின் மூலம் மீளாய்வாண்டிற்காக இனங்கண்டு உறுதிப்படுத்தப்பட்ட சுற்றாடல் மதிப்பீட்டு அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 22,028,440 தொகை எனினும், பேரேட்டுக் கணக்கிற்கு மாற்றிய வருமானம் ரூபா 568,877 தொகை மாத்திரமேயாகக் காணப்பட்டமையால் வருமானம் எனக் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 21,459,563 தொகை செலுத்த வேண்டிய செலவுகள் என நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | செயற்திட்ட முன்மொழிவாளர்களினால் செயற்திட்ட அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வைப்புத் தொகை சுற்றாடல் கணிப்பீட்டு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அதிகார சபையின் நிருவாகச் செலவுகள் மீளாளிப்பு செய்த பின்னர் மீதியாக காணப்படும் செயற்திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றனவா என கவனம் செலுத்தி 2023 ஆண்டின் போது சுற்றாடல் கணிப்பீட்டு செயற்திட்டச் செலவுகள் மீளளிப்பு வருமானம் என கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருடாந்தம் தேவைப்படும் சுற்றாடல் கணிப்பீட்டு செயல் திட்டச்செலவு பாதீட்டின் மூலம் ஒதுக்கிக்கொள்வதற்கும், ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் மற்றும் செலவிடப்பட்ட தொகையை கவனத்திற்கொண்டு ஆண்டிற்கான சரியான வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஊவா பிரதேச அலுவலகத்தின் செலுத்த வேண்டிய | 14,377,105 | 8,256,157 | 6,120,948 | இறுதிக் கணக்குகளில் உரிய முறையில் மீதி காட்டப்பட்டுள்ளது. | மாகாண அலுவலகங்களின் கணக்குகளுடன் இணக்கஞ் செய்து |

| | | | |
|---|---|---|---|
| சுற்றாடல் தாக்க கணிப்பீட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் | | | செலுத்த வேண்டிய மீதியின் பெறுமதியை சரியாக இனங்காண வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொம்பே துப்புரவு ஏற்பாட்டு தரை நிரப்புவதற்காக 2018 வரை கழிவுப் பொருட்களை இடுவது தொடர்பாக பியகம பிரதேச சபையில் இருந்து ரூபா 1,427,728 தொகை மற்றும் கொழும்பு மாநகர சபையில் இருந்து ரூபா 1,313,202 தொகையும் ஆக அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,740,930 தொகை 04 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவீடு செய்ய முடியாமல் காணப்பட்டது. | குறிப்பிட்ட பணத்தை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பிரதான செயலாளர் (மேல் மாகாணம்) மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (மேல் மாகாணம்) ஆகியோருக்கு பிரதிகளுடன் 2021 ஆண்டில் பியகம பிரதேச சபை தலைவருக்கும் கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 30 வருட குத்தகை உடன்படிக்கையின் கீழ் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன், கந்தளாய் குத்தகைக் காணிக்காக 2010 முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதி தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 792,044 இற்கான குத்தகை தொகைக்காக கணக்குகளில் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகை தொகையை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குத்தகைத் தொகையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தாமை தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கியிருந்த காணிகள் நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்துவதற்கும், செலுத்த வேண்டிய குத்தகை தொகைக்காக ஒதுக்கீடு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் 56 இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தச்) சட்டம் | | | |
| (i) பிரிவு 24(ஈ) – 2(1) | சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம் ஒன்றின் பௌதீக திட்டம் தயாரித்தல் தொடர்பாக அதிகார சபை பொறுப்பாக இருக்க வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும், முத்துராஜவெல சுற்றாடல் | சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களை வெளியிடுகின்ற தொழில்நுட்ப செயற்பாட்டின் போது அந்த சுற்றாடல் | முகாமைத்துவ குழுக்களை நிறுவி சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களை உரிய முறையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாதுகாப்புப் பிரதேசம் தலங்கம சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம், கிரகெரி வாவி சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம், வலவ்வத்த வதுரான சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம் மற்றும் பொல்கொட சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம் ஆகியவற்றிற்காக சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேச முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருக்காமையால் மனித செயற்பாடுகள் மற்றும் இயற்கை நிகழ்வுகள் ஊடாக ஏற்படுகின்ற சிக்கல்களை நிவர்த்தி செய்து அந்த சுற்றாடல் வலயங்களை பாதுகாத்துக் கொள்ளல் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பாதுகாப்பு பிரதேசங்கள் 05 இற்காக முகாமைத்துவக் குழு நிறுவுதல் சட்டத் தேவைப்பாடொன்றென கணிக்கப்படவில்லை. | முகாமைத்துவம் செய்து கொண்டு அந்தப் பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பிரிவுகள் 23 (அ) மற்றும் (ஆ) | அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய ஏனைய ஏதேனும் நியமங்கள் மற்றும் ஏனைய பரிமாணங்களுக்கு இணங்கி அன்றி சுற்றாடல் மாசடைதல் ஏற்படக் கூடிய கழிவுப் பொருள் சுற்றாடலுக்கு இடப்படலாகாத போதிலும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமைக்காக பயன்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 23 திகதி வரை சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் நடவடிக்கைகள் நடாத்தப்பட்டு வந்துள்ளது. | தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த 2022 ஜனவரி 27 திகதிய 18/2264 இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரமுடைய மத்திய சுற்றாடல் அதிகார சபையே தமது நிறுவனத்திற்கு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவது தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றாடல் தொடர்பாக ஒழுங்கமைப்பு நிறுவனம் ஒன்றானமையால் ஏனைய நிறுவனங்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டியதுடன், அதற்கு தேவையான சட்டங்களை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 4.1 | 2017 நவம்பர் 06 திகதி சுற்றாடல் உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு சேர்க்கப்பட்டு சுற்றாடல் தாக்கங்கள் மற்றும் கணிப்பீட்டு அலகிற்கு இணைக்கப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு மாதம் காலக்கெடு வழங்கியோ அல்லது அதற்கு பதிலாக ஒரு மாத சம்பளம் செலுத்தியோ அல்லாது 2018 | இந்தப் பெண் உத்தியோகத்தரிடம் அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணம் தவணை அடிப்படையில் தீர்ப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையா | சேவையை கை விட்டுச் செல்லும் உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| ஆம் பந்தி | ஆண்டு ஒக்தோபர் 01 திகதி இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் கீழ் விவசாய திணைக்களத்தின் ஆய்வு உதவி உத்தியோகத்தர் ஒருவர் என நியமனம் பெற்று அதிகார சபையின் சேவையை கைவிட்டுச்சென்றிருந்தார். எவ்வாறாயினும், அந்த பெண் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | லும் அந்தப் பணம் அவரின் தற்போதைய சேவை வழங்குனர் ஊடாக தொடர்ச்சியாக இது வரை கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டிருந்தமையால், அவர் தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேண்டும். |

**(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**

| | | | |
|---|---|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 372(2) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொள்வனவு செய்தல் முற்பணங்கள் ரூபா 3,469,331 தொகை மற்றும் பலவின முற்பணங்கள் ரூபா 626,269 தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 4,095,600 தொகை தீர்க்கப்பட்டிருக்காததுடன், அதில் 05 வருடங்களை மிகைத்துள்ள முற்பணங்கள் ரூபா 791,900 தொகையும், 02 வருடங்களை மிகைத்துள்ள முற்பணங்கள் ரூபா 202,225 தொகையும் மற்றும் 01 மாதத்திற்கும் 10 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலங்களுக்கு உரிய முற்பணங்கள் ரூபா 1,814,544 தொகையும் காணப்பட்டன. | இந்த அனைத்து முற்பணங்களும் உரிய முறையில் தீர்க்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டு செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டவுடன், முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 104(1), (3) மற்றும் (4) | நட்டம் ஒன்று அல்லது இழப்புக்கள் சேதங்கள் ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் காரணம், அதற்கு பொறுப்புச் சொல்லக்கூடியவர்களை தீர்மானிப்பதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியுள் ஏற்பட்டிருந்த 09 வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட 12 வாகன விபத்துக்களின் நட்டங்களை அறவீடு செய்வதற்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒழுக்காற்று செயற்பாடுகள் எடுப்பதற்கும் நடவடிக்கை | அந்த விபத்துக்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், நட்டத்தை அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நட்டம் ஒன்று அல்லது இழப்புக்கள் சேதமொன்று ஏற்பட்ட உடன் விசாரணை அலுவல்கள் மேற்கொண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுத்திருக்கவில்லை. | | |
| (iii) | நிதிப் பிரமாணம் 1641 முதல் 1647 வரை | அதிகார சபையின் வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் அவசர மேற்கொண்டிருக்காமை, பெற்றோல் மற்றும் உதிரிப் பாகங்கள் ஆவணப்படுத்தியிருக்காமை, வாகனங்களின் திருத்த வேலைகளின் போது பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்திராமை, ஒரே திருத்த வேலை மீண்டும் அடிக்கடி மேற்கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்கள் காணப்படாமை, வாகன சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகங்கள், நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் பிரயாணங்கள் தொடர்பாக மாதாந்த பொழிப்புக்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை, வாகனங்களில் இருந்து அகற்றப்படும் பகுதிகள் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்படாமை, நீண்ட காலமாக ஒரே இடத்தில் வாகனங்களை நிறுத்திவைத்தல் ஆகிய விடயங்களின் படி வாகனங்களின் பாதுகாப்பு, பராமரிப்பும் அவற்றின் சிக்கனத் தன்மை தொடர்பாக முறையான கவனத்துடன் செயற்பட்டிருப்பதாக அவதானிக்க முடியவில்லை. | இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வாளரினால் அமைச்சில் வழங்கிய அறிவுரையின் படி அறிக்கையின் பரிந்துரைகளை முறைப் படி செயற்படுத்தி மேற்கூறிய சிக்கல் மற்றும் குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிவிக்கின்றேன் | வாகனங்கள் தொடர்பாக சிறந்த உள்ளகக் கட்டுப்பாடொன்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது விதிக்கப்பட்டுள்ளவாறு தலைமை அலுவலக் கணக்கிற்கு மாற்றாமல் ரூபா 333,488,686 இற்கான தொகையொன்று பல மாதங்களாக மாவட்ட அலுவலகத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் தடுத்து வைத்தல், தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கில் செலவுத் தேவைப்பாடுகளை மிகைத்து ரூபா 129,209,300 இற்கான சராசரி மாதாந்த வைப்பு மீதியொன்று வைத்திருத்தல் ஆகிய காரணங்களினால் அந்தப் | பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை அலுவலகங்களின் இலங்கை வங்கி சேகரிப்புக் கணக்குகளில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பணம் 2023 மார்ச் 27 திகதி தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2023 மே 02 திகதி ரூபா 300 மில்லியனிற்கான தொகையொன்று நிலையான வைப்புக்கள் என மூதலீடு செய்யப்பட்டிருந்தது. | முறையான நிதி முகாமைத்துவம் ஒன்றினை பேணிவந்து சேகரிப்புக் கணக்குகளில் காணப்படும் பணத்தைத் தாமதம் இன்றி தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்காகவும், மாதாந்த தேவைப்பாட்டினை மிகைத்து நடைமுறைக் கணக்குகளில் பணத்தினை பிடித்து வைக்காமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணத்தினை முதலீடு செய்வதன் மூலம் உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |

**1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி சேர் வரி அறவிடக்கூடிய வழங்கல்கள் ரூபா 416,488,904 தொகை ஆன போதிலும், மீளாய்வாண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி திரட்டின் படி அப்பெறுமதி ரூபா 394,686,528 தொகையாக காட்டப்பட்டமையால் வரி அறவிடக்கூடிய வழங்கல்கள் ரூபா 21,802,376 தொகையும், அதனொடு தொடர்புடைய 15 சதவீத பெறுமதி சேர் வரி ரூபா 3,270,356 தொகையும் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | தெரிவிக்கப்பட்ட கருத்து தவறானது. | வரி அறவிடக்கூடிய வழங்கல்களை சரியாக வரி திரட்டுக்களில் உட்படுத்தி கணிக்கப்படும் சரியான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,482,055 இற்கான பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 22,121,759 தொகையாகக் காணப்பட்டது. அதன் படி, நிதி விளைவுகளில் ரூபா 26,360,296 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. அரச மீண்டுவரும் மானியங்கள் 7 சதவீதத்தினால் அதிகரித்து நிகழ்ச்சித் திட்டங்களின் செலவுகள் 78 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும், அதிகார சபையின் செயற்பாட்டு வருமானம் 19 சதவீதத்தினால் குறைவடைந்து செயற்பாட்டுச் செலவுகள் 10 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் இப் பின்னடைவிற்கு முக்கிய காரணமாகக் காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

செயற்பாட்டு வருமானத்தில் அடங்கியிருந்த தொம்பே சுத்திகரிப்புத் தரை நிரப்பல் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 315 சதவீதத்தினால் அதிகரித்து அபாயகர கழிவுப்பொருள் வருமானம் 45 சதவீதத்தினால் அதிகரித்திருந்த காரணத்தினால் அதிகார சபையின் வருமானம் 19 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.
செயற்பாட்டுச் செலவுகளில் அடங்கிய எரிபொருள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் 77 சதவீதத்தினால் உயர்வடைந்து காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்பாட்டுச் செலவுகள் 79

சதவீதத்தினாலும், பராமரிப்பு மற்றும் திருத்த வேலை செலவுகள் 47 சதவீதத்தினாலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

செயற்பாடுகள் மீதான தேறிய நட்டம் முன்னைய ஆண்டின் போது 1.62 சதவீதமாக காணப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டின் போது அது 3.6 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், அதற்கு முக்கியமாக நிதியங்கள் வரையறுக்கப்பட்ட காரணத்தினால் திறைசேரி நிதியக் கிடைப்பனவு 70 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை காரணமாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான மேற்பார்வையொன்றின் கீழ் எரிபொருள் பெறுவனவு, வழங்கல்கள் மற்றும் ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் 2022 ஜுன் 08 திகதி முதல் 2022 ஆகஸ்ட் 16 திகதி வரையான காலப் பகுதியில் அதிகார சபையின் மின் பிறப்பாக்கிக்காக கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ரூபா 713,800 தொகை பெறுமதியான 1660 லீற்றர் டீசல் காணாமல் போயிருந்ததுடன், அதற்கான விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு நட்டங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மொத்த நட்டம் மற்றும் 25 சதவீத மிகை விதிப்பு ஆகிய ரூபா 892,250 தொகை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளக விசாரணை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விசாரணையின் படி எதிர் காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் | குறிப்பிட்ட விசாரணை அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நட்டத்தை அறவீடு செய்து ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை அலுவலக வளாகத்திற்காக 50 வருட குத்தகை அடிப்படையில் 2000 ஆண்டின் போது மேலதிகமாக பெற்றிருந்த 129.88 பர்சஸ் காணிப் பகுதி 19 வருடங்களுக்கு மேலான காலமாகவும் 109.88 பேர்சஸ் அளவான காணி ஒரு வருடத்திற்கு மேலான காலம் முதல் அனுபவித்து வந்த போதிலும் குறிப்பிட்ட குத்தகைத் தொகையைச் செலுத்தி சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அவற்றில் 20 பர்சஸ் காணிப் பகுதியொன்று வேறு நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. | தற்போது 109.88 பர்சஸ் காணிப் பகுதிக்காக பணம் செலுத்தி சட்ட ரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியை சட்டரீதியாக உரித்தாக்கும் அலுவல்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் 1988 ஆண்டின் பின்னர் திருத்தப்பட்டிருக்கவில்லை. | உத்தேசித்த தேசிய சுற்றாடல் (திருத்த) சட்டத்தின் இறுதி வரைவு இல் 30 விடயங்கள் அரசியலமைப்பிற்கு முரணானவை என சட்டமா அதிபரினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த 30 விடயங்களுக்காக அதிகார சபையின் அவதானிப்புக்கள் சுற்றாடல் அமைச்சின் ஊடாக சட்டவரைஞர் திணைக்களத்திற்கு 2023 ஏப்ரல் 18 அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சட்டத்தை திருத்துவதற்குரிய அலுவல்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | திறைசேரியில் இருந்து மற்றும் வெளிநாட்டு உதவிகள் மூலம் கிடைத்திருந்த செயற்திட்ட மானியங்களில் இருந்து மீதியாக காணப்பட்ட ரூபா 18,527,257 தொகை 04 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களை பரிசோதனை செய்து நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கல்கள் 2023 ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மீதித் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் பரிசோதனை அலுவல்களுக்காக 05 வருட காலப்பகுதிக்கு 2013 ஆண்டின் போது அதிகார சபைக்கு வழங்கியிருந்த LK-8428 இலக்கம் கொண்ட நடமாடும் வாயு நிலைமை ஆய்வுகூடத்தின் உடன்படிக்கைக் காலம் 2018 ஜுலை மாதம் முடிவடைந்திருந்தது. அவ்வாறாயினும், இந்த உடன்படிக்கையை மீண்டு நீடிப்பதற்கு அல்லது சொத்தினை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது செயற்படாத நிலையில் காணப்படும் இந்த நடமாடும் வாயு நிலைமை ஆய்வுகூடத்தின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக பணம் வழங்குவதற்கு அல்லது உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு இணக்கமொன்று காணப்படாததுடன், அதனை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தேவைப்பாடு மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளும் இயலுமை என்பவற்றின் மீது கவனம் செலுத்தி அதன்படி செயற்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்போம் நதிகளை நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களுக்கு அமைவின்றிய முறையில் அந்த ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,030,000 செலவிடப்பட்டு மின்சார வண்டியொன்று (Electric cart) கொள்வனவு செய்து கதிர்காமம் புனித பூமியில் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | இந்த விடயம் பாதுகாப்போம் நதிகளை குறிக்கோளுடன் சேர்ந்துள்ளது என பிழையான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள்களுக்கு இணங்க நிதியங்கள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு மாறாக மாத்தறை அகுரெஸ்ஸ பிரதேச சபைக்குரிய சேதனப் பசளை உற்பத்திச் செயற்களத்தில் சேகரிக்கப்படும் மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை சுற்றாடல் சேதங்கள் ஏற்படாதவாறு துப்புரவான முறையில் அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காது பாதுகாப்பற்ற முறையில் திறந்த வெளி ஒன்றில் இடப்பட்டிருந்தவுடன் நிலக்கீழ் நீர் அல்லது வெளிச் சுற்றாடலுக்கு சேராத முறையில் முகாமைத்துவப்படுத்த வேண்டிய சேதனப் பசளை உற்பத்தி செய்முறையில் உருவாகும் கசிவுகள் (Leachate) மூலம் கிடங்குகள் நிரம்பி வெளிச் சுற்றாடலுக்கு சேரக்கூடிய ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த வளாகத்தில் நாளதுவரையாக்கப்பட்ட தீ அணைப்பு உபகரணங்கள் மற்றும் வசதிகள் பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | அக்குரெஸ்ஸ பிரதேச சபையின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் மீறல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட கால வரையினுள் சரி செய்யும் படியும், அவ்வாறு சரி செய்யப்படாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அக்குரெஸ்ஸ பிரதேச சபைக்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட குப்பை செயற்களம் உரிய நியமங்களின் படி நடாத்திச் செல்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | சுற்றாடல் முகாமைத்துவ அலுவல்கள் மேற்கொள்ளும் போது தகவல்கள் சேகரிக்கும் குறிக்கோளுடன் 2020 திசெம்பர் 15 திகதி ரூபா 1.39 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்திருந்த ட்ரோன இயந்திரத்தை பறக்கவிடுவதற்காக இலங்கை வான் படையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக 2022 ஜூலை 15 திகதி வரை கால தாமதப்படுத்தியிருந்ததுடன், அதன் பின்னரும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டது என அவதானிக்க முடியவில்லை. | குறிப்பிட்ட செயற்பாடு, முக்கியத்துவத்தினை கவனத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறிப்பிட்ட சொத்துக்கள் உச்ச அளவில் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் தேசிய சுற்றாடல் மையத்தின் அலுவல்களுக்காக நூலகக் குழு ஒன்று நிறுவியிருக்காததுடன் வருடாந்தம் மற்றும் அதன் பொறுப்புக்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்களில் இருப்புக் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2022 திசெம்பர் 23 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2021 வருட இறுதி கணிப்பீட்டு அறிக்கையின் படி இனங்காணப்பட்ட காணாமல் போன 2746 புத்தகங்களின் நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. மேலும், செய்முறை ஒன்று மற்றும் அங்கீகாரம் ஒன்று இன்றி சேர்வுப் பதிவேட்டிலிருந்து 1983 புத்தகங்கள் அகற்றப்பட்டிருந்தன. | நூலக ஆலோசனை குழுவொன்று 2023 ஆண்டிற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளது. காணாமல் போன புத்தகங்கள் 1984 ஆண்டு முதல் இற்றைவரையான காலத்திற்கு உரியவையாக காணப்பட்டமையால் அதற்காக சுதந்திரமான குழுவொன்று நியமனம் செய்து இருப்புக் கணிப்பீடு மீண்டும் மேற்கொண்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆலோசனையின் படி சேர்வுப் பதிவேடு எதிர் காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கும் சேர்வுப் பதிவேட்டிலிருந்து புத்தகங்களை அகற்றியமை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ‘‘பாதுகாப்போம் நதிகளை’’ நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,083,333 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 60 புல்வெட்டும் இயந்திரங்களில் (Brush Cutter) ரூபா 98,484 தொகை பெறுமதியான 05 இயந்திரங்கள் காணாமல் போயிருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விநியோகிக்கும் போது 05 இயந்திரங்கள் காணாமல் போதல் தொடர்பாக கண்டறியப்பட்டதுடன், அது தொடர்பாக தலங்கம பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன், அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகினால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தினை அறவீடு செய்வதற்கும், தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் செயற்பட வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது முறையே ரூபா 3,577,108 தொகை மற்றும் ரூபா 8,028,200 தொகை செலுத்தி கொள்வனவு செய்திருந்த Dusk Track DRX Desktops Model 8553 உபகரணங்கள் மற்றும் Micro mate Instant வகையான 02 அதிர்வு பகுப்பாய்வு உபகரணம் உரிய காலத்தில் அளவுத்திருத்தம் மேற்கொள்ளாமையால் 2022 ஆண்டு இறுதி வரை விளைவற்று காணப்பட்டது. | இந்த இரண்டு உபகரணங்களையும் அளவுத்திருத்தம் செய்வதற்காக 2023 மே 11 திகதி முகவர் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட அளவுத்திருத்தம் மேற்கொண்டு இந்தப் பண்டம் 2023 மே 31 திகதி மீண்டும் அதிகார சபைக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. | உபகரணங்களை உரிய முறையில் அளவுத்திருத்தம் செய்து வினைத்திறனான முறையில் பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்கு சொந்தமான இரத்தினபுரி மாகாண அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2018 ஆண்டின் போது ரூபா 1,675,350 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செலுத்தப்பட்ட தொகை நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் பெற வேண்டிய தொகையொன்றென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | மூலதன ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் கட்டிட நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு நேரிட்டிருந்தது. நிர்மாண வேலைகள் முடிவடைந்த பின்னர் மூலதனச் சொத்தொன்றாக இனங்காணப்படும். | தேவைப்பாட்டின் படி நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கும் உரிய வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டிணைக்கப்பட்ட ஒரு வருடம் போன்ற குறுகிய காலம் கடந்துள்ள தனியார் கம்பனியொன்றுடன் 2014 ஆகஸ்ட் 08 திகதி மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் படி அந்தக் கம்பனியின் முன்னைய செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தொடர்பாக கருத்தொன்று இன்றி குப்பையின் | மாத்தறை கொட்டவில குப்பை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தாமதமடைதல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதற்காக 2023 | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து முறையான அதிகாரத்துடனான அங்கீகாரத்தின் மீது கொடுப்பனவு |

| | | |
|---|---|---|
| மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றிற்குரிய ஒப்பந்த வேலைக்காக செயலாற்றுகை பிணைமுறியும் பெற்றுக்கொள்ளாமல் உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருந்த போதிலும் இதுவரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது, அந்தக் கம்பனி இடையறாத நிலைத்திருத்தல் தொடர்பாக சிக்கல் தன்மையுள்ள நிலைமையொன்று காணப்பட்டது. அதன் காரணமாக செலவிடப்பட்டிருந்த ரூபா 64,356,400 இற்கான தொகையும் 2009 ஆண்டின் போது பிலிசரு செயற்திட்டத்தின் மூலம் சேதனப் பசளை செயற்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 13,071,372 இற்கான தொகையும் குப்பையை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டது. | மே 10 திகதி சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது. | மேற்கொள்ள வேண்டியதுடன், முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 ஏனைய அமைப்புக்களின் வளங்களை பயன்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட அந்த அமைச்சினால் 2001, 2003 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளின் போது அதிகார சபை பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 27,630,000 தொகை பெறுமதியான 16 கப் வண்டிகளின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்காமல் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த 16 கப் வண்டிகளின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு உரித்தாக்குவது தொடர்பான ஆவணங்கள் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |